# DEPOSITION OF WITNESS

## (Chapter of XXIII, Criminal Procedure Code)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.111/2025**

PROSECUTION WITNESS No. 4

| | |
|---|---|
| Name | : Ranjan |
| Father's Name | : Chinnaya |
| Age | : 60 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 11th day of November, 2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது 26 திருவள்ளுவர் நகர், தண்டையார் பேட்டை, சென்னை–81 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எண் 6 சேனியம்மன் கோயில் தெரு தண்டையார் பேட்டை, சென்னை–81 என்ற முகவரியில் சேகர் ஏஜென்சிஸ் என்ற பெயரில் டெபிள், சேர் வாடைக்குவிடும் கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கில் இறந்துபோன தமிழ்வாணனை இரண்டு மூன்றுமுறை பார்த்துள்ளேன். அவர் தகராறில் 1 வருடத்திற்குமுன்பு இறந்துவிட்டதாக சொன்னார்கள். தமிழ்வாணனை யார் கொலை செய்தார் என்று எனக்குத் தெரியாது. எனது கடைக்கு பக்கத்தில் உள்ள புதுக்குடியிருப்பு சந்தில் சண்டை நடந்தது. நான் எட்டிப் பார்த்தேன் தகராறு பெரிதாக நடப்பதாக தெரிந்தது. அப்போது இரவு8 மணி இருக்கும். சத்தம் அதிகமாக கேட்டதால்

நான் கடையை மூடிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். யார் யாருக்கு இடையில் தகராறு என்று எனக்குத் தெரியவில்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

சாட்சி தன் முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டு நீதிமன்றம் அனுமதித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றாலும் நான் போலீசார் விசாரணையில் 29.01.2024ம் தேதி தமிழ்வாணனும் அவரது மனைவி மட்டும் அக்கா அவரது அம்மா அமுதாவை பார்க்க இரவு 7.15 மணியளவில் வந்திருந்தார்கள் என்றும் நான் கடையில் இருந்தபோது என் கடை அருகே தமிழ்வாணனும் ஆஜர் எதிரியும் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு சத்தம்போட்டனர் என்றும் தமிழ்வாணனின் அம்மா, மனைவி மற்றும் அக்கா வெளியேவந்து பார்த்தார்கள் என்றும் அப்போது கணேஷ் தமிழ்வாணனை பார்த்து ஓத்தா தேவடியா பையா குடிக்க காசு கேட்ட குடுக்கமாட்டாயா என்று தமிழ்வாணனை தலையில் ஓங்கி அடித்தார் என்றும் நான் சண்டையை விலக்கிவிட்டு போலீசுக்கு தகவல் சொன்னேன் என்றும் உடனே கணேஷ் அம்சவள்ளியை பார்த்து உன் புருஷன் நான் கேட்கும்போது பணம் கொடுக்க சொல்லு இல்லையென்றால் இந்த கட்டையாலே அடித்து கொலை செய்துவிடுவேன் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார் என்றும் பின்னர்

போலீசார் வந்து பார்த்தும் அவரை 108 ஆம்புலன்ஸில் அனுப்பி அரசு ஸ்டான்லி மருத்துமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர் என்றும் இறந்தவரின் மனைவி புகார் கொடுத்ததாகவும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் போலீசார் என்னை விசாரித்தபோது தமிழ்வாணனுக்கும், கணேஷ் என்பவருக்கும் ஏற்கனவே மதுகுடிப்பது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு கணேஷ் தமிழ்வாணனை பாட்டிலால் குத்த முயன்றதாக தமிழ்வாணன் தன் மனைவியிடம் கூறியதாகவும் அதற்கு அவரது மனைவி கணேஷிடன் சேர்ந்து குடிக்காதே என்று அறிவுரை கூறியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி எங்கள் பகுதியை சேர்ந்தவர் என்பதால் நான் அவரைப் பார்த்து பயந்து நடந்த சம்பவங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**<u>SC.No.111/2025</u>**

PROSECUTION WITNESS No. 5

| | |
|---|---|
| Name | : Moorthy |
| Father's Name | : Muthukrishnan, |
| Age | : 37 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 11th day of November, 2025.

---

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் சென்னை-81, தண்டையார் பேட்டை, வ.உ.சி. நகரில் உள்ள காந்திநகர் தெருவில் கதவு எண் 8/17 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் ராயல் பிரியாணி என்ற பாஸ்ட்புட் கடையில் மாஸ்டராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. வழக்கில் இறந்துபோன தமிழ்வாணனை எனக்குத் தெரியாது. இந்த வழக்கு கொலை வழக்கு என்று தெரியும்.

(நீதிமன்றம் பலமுறை எந்த வழக்கிற்காக நீங்கள் சாட்சியம் அளிக்க வரவேண்டும் என்று போலீசார் கூறினார்களா என்று கேட்டும் சாட்சி மீண்டும் மீண்டும் தனக்கு இந்த வழக்குபற்றி தெரியாது என்று கூறுகிறார். நீதிமன்றம் எச்சரித்த பிறகும் சாட்சி மீண்டும்

மீண்டும் தனக்கு எதுவுமே தெரியாது என்று கேள்வி புரியாதது போலவே பதிலளிக்கிறார் எனவே அவர்மீது தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படுகிறது.)

<u>சாட்சி விசாரணை தொடர்கிறது</u>

தற்போது சாட்சி தமிழ்வாணன் கொலை வழக்கில் சாட்சியம் அளிக்க வந்திருப்பதாக கூறுகிறார். 2024 நான் திண்டிவனத்திலிருந்து நான் சென்னைக்கு வந்தேன். மாதம் மற்றும் தேதி எனக்கு தற்போது ஞாபகமில்லை. காலையில் நான் என் கடைக்கு வேலைக்கு வந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை போலீசார் விசாரித்த நாளுக்கு முந்தையநாள் இரவு 8.30 மணிக்கு கணேஷ் என்பவர் தமிழ்வாணனை அடித்து அவர் இறந்துவிட்டார் என்று அதுசம்பந்தமாக என்னிடம் விசாரிக்க நான் ஊரில் இருந்தேன் சம்பவ சமயம் நான் சென்னையில் இல்லை என்றும் எனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்று போலீசாரிடம் கூறினேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. இறந்துபோன தமிழ்வாணையும் நான் பார்த்தது கிடையாது. இதை நான் என்னை விசாரித்த போலீசாரிடம் கூறினேன்.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

சாட்சி தன் முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டு நீதிமன்றம் அனுமதித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–

போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் நான் 29.01.2024 அன்று இரவு சுமார் 7.15 மணியளவில் நான் கடையில் இருந்தபோது

என் கடையருகே தமிழ்வாணனும், கணேஷிம் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், அவர்கள் இருவரும் மதுபோதையில் இருந்தார்கள் என்றும் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு சத்தம்போட்டனர் என்றும் அந்த சத்தம் கேட்டு தமிழ்வாணின் அம்மா, மனைவி மற்றும் அக்கா வெளியே வந்தனர் என்றும் அப்போது கணேஷ் தமிழ்வாணனை பார்த்து ஓத்தா தேவடியா பையா குடிக்க காசு கேட்ட குடுக்கமாட்டாயா என்று தமிழ்வாணனை தலையில் ஓங்கி அடித்தார் என்றும் நான் சண்டையை விலக்கிவிட்டு போலீசுக்கு தகவல் சொன்னேன் என்றும் உடனே கணேஷ் அம்சவள்ளியை பார்த்து உன் புருஷன் நான் கேட்கும்போது பணம் கொடுக்க சொல்லு இல்லையென்றால் இந்த கட்டையாலே அடித்து கொலை செய்துவிடுவேன் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார் என்றும் பின்னர் போலீசார் வந்து பார்த்தும் அவரை 108 ஆம்புலன்ஸில் அனுப்பி அரசு ஸ்டான்லி மருத்துமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர் என்றும் இறந்தவரின் மனைவி புகார் கொடுத்ததாகவும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் போலீசார் என்னை விசாரித்தபோது தமிழ்வாணனுக்கும், கணேஷ் என்பவருக்கும் ஏற்கனவே மதுகுடிப்பது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு கணேஷ் தமிழ்வாணனை பாட்டிலால் குத்த முயன்றதாக தமிழ்வாணன் தன் மனைவியிடம் கூறியதாகவும் அதற்கு அவரது மனைவி கணேஷிடன் சேர்ந்து குடிக்காதே என்று அறிவுரை கூறியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி எங்கள்

பகுதியை சேர்ந்தவர் என்பதால் நான் அவரைப் பார்த்து பயந்து நடந்த சம்பவங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை– இல்லை**

**மறுவிசாரணை– இல்லை**

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |